2021 செப்டம்பர் 9]

அவர்களுடைய கோரிக்கையை வருங்காலத்தில் அரசு கனிவுடன் கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.*

திரு. மு. பாபு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

ஊராட்சிகளைப் பிரித்தல்

***2255—திரு. S. ராஜகுமார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதியில் உள்ள ஊராட்சிகளைப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மயிலாடுதுறை மற்றும் குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 60 ஊராட்சிகளில் கிராம ஊராட்சிகளைப் பிரிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கலைஞர் ஆட்சியிலே, 16–3–2007 அன்று ஊராட்சிகளைப்*

பிரிப்பது, சேர்ப்பது உள்ளிட்ட செயல்பாடுகளைச் செய்வதற்காக ஓர் அரசாணை வெளியிடப்பட்டது. இன்றைக்கு, எங்கள் பகுதியிலே பெரிய ஊராட்சிகளெல்லாம், இரண்டு பிர்காவாக இருக்கக்கூடிய ஊராட்சிகளெல்லாம் நிறைய இருக்கின்றன. எங்கள் மாவட்டமான மயிலாடுதுறையில் திருமுல்லைவாசல் என்ற ஊராட்சியில் இரண்டு கவுன்சிலர்கள், ஓர் ஊராட்சிமன்றத் தலைவர் இருக்கின்றார்கள். அதுபோன்ற பெரிய ஊராட்சிகளை நிருவகிப்பதிலும், செயல்படுத்துவதிலும் மிகவும் சிரமம் இருக்கிறது என்பதைக் கருத்திலே கொண்டுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கடந்த 2007 ஆம் ஆண்டே, உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது இந்த அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள்.

நான், இதுகுறித்து கடந்த அரசிடம் கேட்டபோது அவர்கள், 2021 மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதனால், அதற்குப் பிறகு இந்தப் பணிகள் எடுக்கப்படும் என்று பதில் கடிதம் அனுப்பியிருந்தார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முக்கியத்துவம் தந்து, இந்த ஊராட்சிகளைப் பிரிக்க வேண்டியது அவசியம் என்பதைக் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, 16–3–2007 அன்று ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் வெளியிடப்பட்ட அரசாணை எண் 131–ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக, பஞ்சாயத்துகளை, ஒன்றியங்களைப் பிரிக்க வேண்டுமென்றால், அதற்கான நடைமுறைகள் குறித்து அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்கென்று ஒரு நெடிய நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. பிரிக்க வேண்டுமென்று வாயளவில் சொல்வதைவிட, அதற்காகப் பல முயற்சிகளை எடுக்க வேண்டியிருக்கிறது. படிப்படியாக, முதலில் எந்த ஊராட்சிகளைப் பிரிக்க வேண்டுமென்று விரும்புகின்றார்களோ, அந்த ஊராட்சிகளைப் பிரிப்பதாக இருந்தாலும், சேர்ப்பதாக இருந்தாலும், தரமுயர்த்துவதாக இருந்தாலும் அவற்றிற்கான

2021 செப்டம்பர் 9]

காரணங்களை அறிவிக்கையாக வெளியிடுதல் மற்றும் முதல் கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கான நாளினை அறிவிக்க வேண்டும். அந்த முதல் கருத்துக்கேட்புக் கூட்டம் கிராம அளவில் நடைபெறும். ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில், முதல் கருத்துக்கேட்புக் கூட்டம் தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரமுகர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் குடியிருப்புச் சங்கங்கள் ஆகியோருடன் நடைபெற வேண்டும். பொதுமக்கள் அறியும்வண்ணம், செய்தித் தாள், உள்ளூர் தொலைக்காட்சிகள் மற்றும் ஒலிபெருக்கிகள்மூலம் விளம்பரப்படுத்த வேண்டும். முதல் கருத்துக்கேட்புக் கூட்டம் நடத்தப்பட்டு, பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சிகளிடமிருந்து மனுக்களும், கோரிக்கைகளும் பெறப்படும்.

பிறகு, இரண்டாவது கருத்துக்கேட்புக் கூட்டம் ஊராட்சி அளவில் அல்லது மாவட்ட அளவில், அதாவது முதல் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மற்றும் கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அதன்பின்பு ஒரு மாத கால அவகாசம் வழங்கி, மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில், தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள் மற்றும் இதர பிரதிநிதிகளுடன் இரண்டாம் கட்ட கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெறும். பின்னர், இவ்வாறு தயாரிக்கப்பட்ட வரைவு முன்மொழிவினை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தொடர்புடைய ஊராட்சி அமைப்புகளிலும், அலுவலகங்களிலும் உள்ள தகவல் பலகைகளில் கருத்துகளையும், ஆட்சேபணைகளையும் பெறும் வகையில் வெளியிட வேண்டும். அதே கால அளவில், இது தொடர்பான பரிந்துரை, மாவட்ட ஆட்சியர் அவர்களால், இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். பிறகு, இவ்வூராட்சிகளைப் பிரிப்பது, சேர்ப்பது, தரமுயர்த்துதல் தொடர்பாகப் பரிசீலனை செய்து, தேவைப்படின், இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களின் தலைமையில், மாவட்ட அளவில் மீண்டும் மூன்றாவது கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெற வேண்டும். அவ்வாறு பரிசீலிக்கப்பட்ட முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பி வைக்கப்படும். அரசு அதன்மீது பரிசீலனை செய்து, உரிய உத்தரவுகளை வழங்கும். ஆக, இவ்வளவு நெடிய நடைமுறைகள் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு

சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், சம்பந்தப்பட்ட தொகுதியில் இருக்கக்கூடிய பெரிய ஊராட்சிகளைப் பிரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டால், அரசும் அதற்கான முயற்சிகளில் ஈடுபடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள். நிறைய பேர் துணைக் கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் பொருத்தமான பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது மிகச் சரியான பதில். ஆனால், அதிலே இரண்டு கட்ட நடவடிக்கைகளை நாம் ஏற்கெனவே எடுத்திருக்கின்றோம். மூன்றாவது கட்ட கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெறுவதற்குள்ளாக அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஊராட்சியிலே பேசியிருக்கின்றோம். சில இடங்களிலே நகராட்சியுடன் சேர்க்கக்கூடிய இடங்கள்தான் முழு ஊராட்சி. . .

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் அங்கே இரண்டு கட்டங்கள் இருக்கின்றன. அதையும் செய்து தரச் சொல்லுங்கள்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கட்டங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டும், நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இன்னும் இரண்டு கட்டங்கள் இருக்கின்றன.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு பிறகு வந்த அரசு அதை அப்படியே போட்டுவிட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அதை மீண்டும் எடுத்துச் செய்ய வேண்டுமென்ற அவசியத்தை, நீங்கள் சொல்வதுபோல செயல்படுவதற்கு நாங்கள் எல்லோரும் நிச்சயமாக, தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 செப்டம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் சுருக்கமாக. நீங்கள் விவரங்களையெல்லாம் சொல்லி விட்டீர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, ஊராட்சிகளைப் பிரிப்பது மட்டுமல்ல, கடந்த காலத்தில் பல்வேறு நடைமுறைகள் கிடப்பிலே போடப்பட்டன. அதிலே இதுவும் ஒன்றாக இருக்கலாம். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான அரசு, நீங்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பைத் தரும், எதிர்காலத்தில் நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

வீட்டுமனைப் பட்டா

***3166—திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, பாரதி நகர், 47–வது வார்டு, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் உள்ள பாரதி நகர் திட்டப் பகுதி தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியில் வசிப்பவர்களில் முழு கிரயத் தொகை செலுத்திய பயனாளிகளுக்கு தற்போது கிரயப் பத்திரம் வழங்கப்பட்டு வருகிறது.